1979 ஏப்ரல் 27]

ஆனால், ரிசர்வ் செய்யப்படாத டிக்கட்டுகள், ரூ. 1.80, 1.40 என்று இருக்கிறது. அந்த டிக்கட்டுகள் எப்படி வெளியே விற்கப் படுகிறது? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

[முற்பகல் 9—10]

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, நிச்சயமாக அதுபற்றி நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, சென்னை நகரில் இருக்கக்கூடிய பல சினிமா தியேட்டர்களில் ஒவ்வொரு நபருக்கும் டிக்கட் கொடுத்து, அவர்கள் உள்ளே போனால் வெளியே வரமுடியாது என்ற அமைப்பை வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது உள்ளே போய் உட்கார்ந்த நபர்கள் எப்படி வெளியே வந்து விற்க முடியும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, தியேட்டரைச் சேர்ந்தவர்கள் தான் இவ்வாறு டிக்கட்டுகளை முன்கூட்டியே விற்பனை செய்து, அதிக விலைக்கு கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள் என்று அறிய முடிகிறது. ஆகவே, அரசு இந்தத் துறையில் அதிகக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மேல் நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள்

* வினா எண். 849—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ் எம். ஏ. பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை மேனிலைப் பள்ளிகளில் நியமிப்பதில் 4-வது இடம் என்பதி லிருந்து தமிழ் ஆசிரியர்: பட்டதாரி ஆசிரியர்: என்று 1 : 1 என்ற விகிதத்தில் நியமிக்கும் எண்ணம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவரவர்களே, இதில் தமிழ் புலவருக்கு படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒருவர் பி.ஏ.

படிக்கும்போது வரலாறு படித்து விட்டு, எம்.ஏ.யில் தமிழ் எடுத்து படித்திருப்பார். அப்படிப்பட்டவர்களை விட 5 ஆண்டு காலம் தமிழ் புலவர் படிப்பு படித்து வருகிறவர்கள் திறமை சாலிகளாக இருப்பார்கள். ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை தமிழாசிரியர்களால் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, தமிழிலே எம். ஏ. பட்டமும, பின்னர் பி.டி. பட்டமும் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளிகளில் சர்வீஸ் அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா அல்லது பி.ஏ. தமிழில் படித்து விட்டு, எம்.ஏ.யும் தமிழில் படித்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியராக வேலை பார்க்கும் தமிழ் வித்துவான் அல்லது புலவர் தமிழில் எம்.ஏ.,பி.எட். பட்டம் பெற்றிருந்தால் அதன் அடிப்படையில் முதலிடம் தரப்படுகிறது. உயர் நிலைப் பள்ளிகளில் வித்துவான் அல்லது புலவர் தமிழாசிரியராக இருந்தால் தமிழில் எம்.ஏ., பட்டம் பெற்று தமிழாசிரியர் அல்லது செகண்டரிகிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தால் அவருக்கு இரண்டாம் இடம் தரப்படுகிறது; பி.ஏ. (தமிழ்) படித்து, பின்னால் எம்.ஏ. (தமிழில்) பி.எட். பட்டம் பெற்றிருந்தால் அதற்கு அடுத்த இடம் தரப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக தமிழாசிரியர்கள் என்ற நிலை இருக்கிறது.— அதற்கு முன்னால் எங்களுக்குத் தரவேண்டுமென்று புலவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு பரிசிலனை செய்து வருகிறது.

நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி பதவி

* வினா எண். 850—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி பதவி நீண்ட நாட்களாகவே காலியாக வைக்கப்பட்டிருப்பது உண்மையா?